# பிரதமரின் மீன்வள மேம்பாட்டு திட்டம் PMMSY

**நோக்கம் :**

1. மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்போரின் வருமானம் மற்றும் வேலை வாய்ப்பை இரட்டிப்பாக்குதல்.
2. மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்போர்களுக்கு சமூக மற்றும் பொருளாதார பாதுகாப்பினை வழங்குதல்.
3. அறுவடைக்கு பிந்தைய மேலாண்மை மற்றும் தர மேம்பாட்டு மதிப்பு சங்கிலியை நவீனப் படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல்.
4. நிலம் மற்றும் நீரைப் பயன்படுத்தி விரிவாக்கம் மற்றும் தீவிரப்படுத்துதல் மூலம் மீன் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல்.

**நிதிமுறை :**

GOI / NFDB மூலம் பயனடையும் தனி நபர்கள் / குழுக்கள் நிதி (மானியம்) உதவி %

| வகை | நிதி உதவி | |
|---|---|---|
| | மத்திய அரசின் பங்கு | பயனாளி பங்கு |
| பொது பிரிவு | 40% | 60% |
| ஆதி திராவிடர் / பழங்குடியினர் / பெண்கள் | 60% | 40% |

**பயனாளிகள் :**

1. மீனவர்கள், மீன் வளர்ப்போர், மீனவ தொழிலாளர்கள், மீன் விற்பனையாளர்கள், மீன்வளத் துறையில் உள்ள சுயஉதவிக் குழுக்கள், கூட்டு பொறுப்புக் குழுக்கள்.
2. மீன் வள மேம்பாட்டு நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு இணையங்கள், தொழில் முனைவோர் மற்றும் தனியார் நிறுவனங்கள்.
3. மீன் வளர்ப்போர் உற்பத்தியாளர் சங்கங்கள் / நிறுவனங்கள் (FFPOகள்)

**பயனாளி சார்ந்த துணை - திட்டங்கள்**

| வஎண். | துணை - திட்டங்கள் | திட்ட மதிப்பு |
|---|---|---|
| **I.** | **கடலில் மீன் வளர்ப்பு மற்றும் கடற்பாசி வளர்ப்பு உள்ளிட்ட கடல் மீன்வள மேம்பாடு** | **ரூபாயில்** |
| 1. | சிறிய கடல் மீன் குஞ்சு பொரிப்பகம் நிறுவுதல் | 50 லட்சம் |
| 2. | பெரிய கடல் மீன் குஞ்சு பொரிப்பகம் நிறுவுதல் | 250 லட்சம் |
| 3. | கடல் மீன் குஞ்சு நர்சரிகள் நிறுவுதல் | 15 லட்சம் |
| 4. | கடலில் கடல்மீன் வளர்ப்பு கூண்டுகளை நிறுவுதல் (100–120 கன மீட்டர் அளவு) | 5 லட்சம் |
| 5. | கடற்பாசி வளர்ப்பு மிதவைகள் நிறுவுதல் உள்ளீடுகள் உட்பட (1 ராஃப்ட்) | 1500 ரூபாய் |
| 6. | கடற்பாசி வளர்ப்பு மோனோ லைன் / டியூப் நெட் முறையில் நிறுவுதல் (ஓர் அலகு என்பது 25 மீ நீளமுள்ள 15 கயிறுகள்) உள்ளீடுகள் உட்பட | 8000 ரூபாய் |
| 7. | ஆளி வளர்ப்பு | 2000 ரூபாய் |
| **II.** | **அலங்கார மற்றும் பொழுதுபோக்கு மீன்வளர்ப்பு** | |
| 1. | வீட்டின் பின்புறம் அலங்கார கடல் மீன்வளர்ப்பு | 3 லட்சம் |
| 2. | நடுத்தர அளவிலான அலங்கார கடல் மீன்வளர்ப்பு | 8 லட்சம் |

| வஎண். | துணை - திட்டங்கள் | திட்ட மதிப்பு |
|---|---|---|
| **III.** | **அறுவடைக்குப் பிந்தைய மற்றும் குளிர்ப்பதன உள்கட்டமைப்பு** | |
| 1. | குளிரூட்டப்பட்ட வாகனங்கள் (Refrigerated Vans) | 25 லட்சம் |
| 2. | குளிர்காப்பிடப்பட்ட வாகனங்கள் (Insulated Vans) | 20 லட்சம் |
| 3. | ஐஸ் பெட்டியுடன் கூடிய மோட்டார் சைக்கிள் | 75 ஆயிரம் |
| 4. | ஐஸ் பெட்டிகளுடன் கூடிய மிதிவண்டி | 10 ஆயிரம் |
| 5. | மீன் விற்பனைக்கு ஐஸ் பெட்டிகளுடன் கூடிய மூன்று சக்கர வாகனம் (இ–ரிக்ஷாக்கள்) | 3 லட்சம் |
| 6. | உயிர் மீன் விற்பனை மையங்கள் (நடமாடும் நிலையம் உட்பட) | 20 லட்சம் |
| 7. | மீன் தீவன ஆலைகள் | |
| | i) சிறிய மீன் தீவன உற்பத்தி ஆலை (திறன் 2 டன் / நாள்) | 30 லட்சம் |
| | ii) நடுத்தர மீன் தீவன உற்பத்தி ஆலை (திறன் 8 டன் / நாள்) | 100 லட்சம் |
| | iii) பெரிய மீன் தீவன உற்பத்தி ஆலை (திறன் 20 டன் / நாள்) | 200 லட்சம் |
| | iv) மீன் தீவன உற்பத்தி ஆலை (குறைந்த பட்சம் 100 டன் / நாள்) | 650 லட்சம் |
| | v) கடல் மீன் விற்பனை அங்காடி | 10 லட்சம் |
| | vi) மீன் மதிப்பு கூட்டு நிறுவனம் | 50 லட்சம் |
| **IV.** | **ஆழ்கடல் மீன்பிடித்தலின் மேம்பாடு** | |
| 1. | பாரம்பரிய மீனவர்களுக்கு ஆழ்கடல் மீன்பிடி படகுகளை வாங்குவதற்கான நிதியுதவி | 120 லட்சம் |
| 2. | ஏற்றுமதி திறனை மேம்படுத்த தற்போதுள்ள மீன்பிடி படகுகளை மேம்படுத்துதல் | 15 லட்சம் |
| 3. | இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடி படகுகளில் நவீன கழிப்பறைகளை நிறுவுதல் | 50 ஆயிரம் |
| **V.** | **மீன்வள மேலாண்மை மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பு** | |
| 1. | பாரம்பரிய மற்றும் மோட்டார் பொருத்தப்பட்ட படகுகளுக்கு தொலை தொடர்பு சாதனங்கள் வழங்குதல் (VHF, DAT, NAVIC, Transponder) | 35 ஆயிரம் |
| **VI.** | **மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பை பலப்படுத்துதல்** | |
| 1. | பாரம்பரிய மற்றும் மோட்டார் பொருத்தப்பட்ட படகுகளுக்கு பாதுகாப்பு கருவிகளை வழங்குதல் | 1 லட்சம் |
| 2. | பாரம்பரிய மீனவர்களுக்கு மாற்று படகுகள் மற்றும் வலைகள் வழங்குதல் | 5 லட்சம் |
| 3. | மீனவர்களுக்கு PFZ சாதனங்கள் நிறுவுதல் மற்றும் பராமரிப்பு செலவு உட்பட | 11 ஆயிரம் |

- மேற்கண்ட அனைத்து திட்டங்களுக்குமான நிதியுதவி, பொதுப்பிரிவினர் மற்றும் ஆண்களுக்கு 40 சதவீத மானியமும், பெண்கள் / ஆதி திராவிடர் / பழங்குடியினர் பிரிவை சேர்ந்தவர்களுக்கு 60 சதவீத மானியமும் மத்திய அரசின் மூலம் வழங்கப்படும்.
- திட்டம் சார்ந்த நிதியுதவி விபரங்களுக்கு சம்மந்தப்பட்ட தமிழ்நாடு மீன்வளத்துறை அலுவலகத்தை அணுகவும்.
- திட்டம் சார்ந்த தொழில்நுட்ப விபரங்களுக்கு மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையம் மண்டபம் அலுவலகத்தை அணுகவும்.

**தயாரிப்பு :** **மு. சக்திவேல், ரெ. ஜெயக்குமார், கோ. தமிழ்மணி, பா. இரமேஷ்குமார், பி. ஜான்சன், கே.கே. அனிக்குட்டன், மு. சங்கர், ஏ.கே. அப்துல் நாசர்**

**வெளியீடு** **இயக்குனர், இ.வே.ஆ.க. மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையம், கொச்சி, கேரளா**

**CMFRI Pamphlet No. 93/2021**